ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1974/7 - 2016 ජූලි මස 04 වැනි සඳුදා - 2016.07.04

*1974/7 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, அபிவிருத்தி உபாய கருத்திட்டங்கள் சட்டம்**

3 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழான கட்டளை

திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, அபிவிருத்தி உபாய கருத்திட்டச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், உபாய அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம ஆகிய நான், முதலீட்டு ஊக்குவிப்பு என்ற விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் 2011, யூலை 11 ஆந் திகதிய 1714/4 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் பிரசுரிக்கப்பட்ட கட்டளைக்கு மேலதிகமாக இக்கட்டளையினை ஆக்குகின்றேன் :-

2011, யூலை 11 ஆந் திகதிய 1714/4 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் (4) ஆம் வாசகத்தின் கருத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு வழங்கப்பட்ட காலத்தினை நீடிக்கும் வகையில் பின்வருமாறு வாசிக்கப்படும் வகையில் இத்தால் திருத்தப்படுகிறது :-

"(4) மேலே குறிப்பிடப்பட்ட "தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை நிர்வாக மாவட்டத்தில் சொகுசு ஹோட்டல் ஒன்று மற்றும் வதிவிட அலகுகள் மற்றும் அல்லது வில்லாக்களை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டம்" இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் கருத்திட்டக் கம்பனி என்பவற்றுக்கிடையில் கருத்திட்ட உடன்படிக்கை நிறைவேற்றப்பட்ட திகதியான 2011, பெப்புருவரி 07 ஆந் திகதியிலிருந்து எழுபது (70) மாதங்களைக் கொண்ட அதாவது 2016.12.31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குள் வர்த்தக தொழிற்பாடுகளை ஆரம்பித்தல் வேண்டும்".

மலிக் சமரவிக்கிரம,
உபாய அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்.

கொழும்பு,
2016, யூன் 24.

7 - 811/1

**2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, அபிவிருத்தி உபாய கருத்திட்டங்கள் சட்டம்**

*3 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழான கட்டளை*

*திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, அபிவிருத்தி உபாய கருத்திட்டச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், உபாய அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம ஆகிய நான், முதலீட்டு ஊக்குவிப்பு என்ற விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் 2012, திசெம்பர் 19 ஆந் திகதிய 1789/22 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் கீழ் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் பிரசுரிக்கப்பட்ட கட்டளைக்கு மேலதிகமாக இக்கட்டளையினை ஆக்குகின்றேன் :-*

*2012, திசெம்பர் 19 ஆந் திகதிய 1789/22 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் கட்டளையின் கீழ் (4) ஆம் வாசகக் கருத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு வழங்கப்பட்ட காலத்தினை நீடிக்கும் வகையில் பின்வருமாறு இத்தால் திருத்தப் படுகிறது :-*

*“(4) மேலே குறிப்பிடப்பட்ட மேல் மாகாணத்தில் கொழும்பு 3, காலி வீதி, 116 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள 90 சேவைகளுடன் கூடிய தொடர் மாடி வீடுகளுடன் 475 அறைகளைக் கொண்ட நகர ஹோட்டல் ஒன்றினை நிர்மாணித்து தொழிற்படுத்தல் 2012, யூலை 19 ஆந் திகதி இலங்கை முதலீட்டுச் சபையுடன் கைச்சாத்திடப்பட்ட கருத்திட்ட உடன்படிக்கைத் திகதியிலிருந்து அறுபத்தைந்து (65) மாத காலப்பகுதியொன்றுக்குள் தொழிற்பாடுகளை ஆரம்பித்து 2017, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி நிறைவு செய்தல் வேண்டும்.”.*

*மலிக் சமரவிக்கிரம,*
*உபாய அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்.*

கொழும்பு,
*2016, யூன் 24.*

*7 - 811/2*

---

**2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, அபிவிருத்தி உபாய கருத்திட்டங்கள் சட்டம்**

*3 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழான கட்டளை*

*திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, அபிவிருத்தி உபாய கருத்திட்டச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், உபாய அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம ஆகிய நான், முதலீட்டு ஊக்குவிப்பு என்ற விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் 2012, ஒற்றோபர் 31 ஆந் திகதிய 1782/28 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் பிரசுரிக்கப்பட்ட கட்டளைக்கு மேலதிகமாக இக்கட்டளையினை ஆக்குகின்றேன் :-*

*2012, ஒற்றோபர் 31 ஆந் திகதிய 1782/28 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் கட்டளையின் கீழ் (4) ஆம் வாசகக் கருத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு வழங்கப்பட்ட காலத்தினை நீடிக்கும் வகையில் இத்தால் திருத்தப்படுகிறது :-*

*“(4) மேலே குறிப்பிடப்பட்ட மேல் மாகாணத்தில் கொழும்பு 1, கோட்டையில் அமைந்துள்ள சொகுசு ஹோட்டல் ஒன்று உள்ளடங்கலாக கலப்பு பயன்பாட்டு கட்டிடத் தொகுதியொன்று திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க உபாய அபிவிருத்தி கருத்திட்ட சட்டத்தின் கீழ் உபாய அபிவிருத்தி கருத்திட்டமொன்றாக கலப்பு பயன்பாட்டுக் கருத்திட்டத்திற்கான அங்கீகாரத் திகதியிலிருந்து குறித்ததொரு காலப்பகுதிக்குள் 2021, திசெம்பர் 31 ஆந் திகதி வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பித்தல் வேண்டும்.”*

*மலிக் சமரவிக்கிரம,*
*உபாய அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்.*

கொழும்பு,
*2016, யூலை 01.*

*7 - 811/3*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.